தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
[Impact Factor: 9.47] Monthly, Peer-Reviewed, Refereed, Indexed Journal with IC Value : 86.87
Volume - 1, Issue - 10, July - 2025

DOIs: https://doi.org/10.63300/tm0110.25 --:-- Research Paper

# Lifestyle of Parathaiyar as Shown by Kalittokai

**Dr. R. PRIYADHARSHINI**
Assistant Professor, Department of Tamil,
G.T.N. Arts College, Dindigul
Email: priyabalaji205@gmail.com, ORCID: 0000000266710182

## Abstract

The ancient grammar and literature of the Tamil language mention the main characters in the Aga life of the people as Thalaivan, Thalaivi, and Dozhi. In this, Parathaiyar is the one who has the same characteristics as Thalaivi. The incidents about Parathaiyar have been mentioned by Tolkappiyar in the Kalaviyal. As drama characters, one of the five dynasties of Marutha, in the epic poems of Sangam literature, the events of Parathaiyar's life are recorded as the reason for the conflict between Thalaivan and Thalaivi. There are records about Parathaiyar in Thirukkural. Agapporul Vilakkam very clearly explains on what basis Parathaiyar is divided. Thus, Parathaiyar is notable among the egoists mentioned in grammar and literature. Parathaitar is the one who is often credited with the rights to the Marutha. This article is based on the lifestyle of Prathaiyar found in the Kalittokai Maruthakali songs to illustrate the qualities and virtues of Parathaiyar.

**Keywords** : *Parathaiyar discrimination, Love, Lifestyle, Motherhood.*

# கலித்தொகை காட்டும் பரத்தையர் வாழ்வியல்

**முனைவர் இரா.பிரியதர்ஷினி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஜி.டி.என். கலைக்கல்லூரி, திண்டுக்கல்
Email: priyabalaji205@gmail.com ORCID : 0000000266710182

## ஆய்வுச்சுருக்கம்

தமிழ்மொழியின் பண்டைய இலக்கண, இலக்கியங்கள் கூறும் மக்களின் அக வாழ்க்கையில் முதன்மையானவர்கள் தலைவன், தலைவி, தோழி ஆவர். இதில் தலைவிக்கு நிகரான பண்புடையவராகத் திகழ்பவர் பரத்தையர் ஆவர். பரத்தையர் பற்றிய நிகழ்வுக் கூற்றுகளைத் தொல்காப்பியர் களவியலில் குறிப்பிட்டுள்ளார். நாடகப் பாத்திரங்களாக, ஐந்திணைகளில் ஒன்றான மருத நிலத்தில் தலைவிக்கும் தலைவனுக்கும் இடையில் பிரிவு தோன்றுவதற்குக் காரணமாகப் பரத்தையரின் வாழ்க்கை நிகழ்வுகள் சங்க அகப்பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. திருக்குறளில், பரத்தையர் பற்றிய பதிவுகள் உள்ளன. அகப்பொருள் விளக்கம் பரத்தையர் எத்தகைய தன்மை அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளார் என்று மிகவும் தெளிவாக விளக்குகின்றது. இதனால் இலக்கண, இலக்கியங்கள் எடுத்துக்கூறும் அக மாந்தர்களுள் குறிப்பிடத்தக்கவர், மருதத்திற்கே பெரும்பாலும் உரிமை பூண்டு விளங்குபவர் பரத்தையர் எனலாம்.

கலித்தொகை மருதக்கலிப் பாடல்களில் காணப்படும் பரத்தையர் உறவுப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு பரத்தையரின் பண்பு நலங்களை, வாழ்வியலை எடுத்துக்கூறுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**குறிப்புச் சொற்கள்** : *பரத்தையர் பாகுபாடு, வாழ்க்கை முறை, அன்புநெறி, தாய்மை உள்ளம்*

**முன்னுரை**

இலக்கியம் என்பது அந்தந்த காலத்தில் சமுதாயத்தில் வாழும் மக்களின் வாழ்கையை எடுத்தியம்பும் காலக்கண்ணாடி ஆகும். சங்க இலக்கியங்கள் அகம், புறம் என்று இரண்டாகப் பகுத்து இவ்வாழ்க்கை நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளன.

அக வாழ்க்கையைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து திணைகளுக்கு உரியவையாக இலக்கண, இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இவற்றுள் வயலும் வயல் சார்ந்த நிலப்பகுதி ‘மருதம்’ என்று அழைக்கப்படும். இம்மருத நிலத்திற்குரிய உரிப்பொருளான ஊடலும் ஊடல் நிமித்தமும் நிகழ்வதற்குப் பரத்தையர் முக்கிய காரணமாகத் திகழ்கின்றனர். அப்பரத்தை பற்றிய பதிவுகள் பல காணப்பட்டாலும் பரத்தையர் வாழ்வியலைத் தெளிவாக எடுத்துக்கூறும் இலக்கியம் கலித்தொகை. தலைவன், தலைவி மணந்து மனையறம் மேற்கொண்டது. தலைவியைப் பிரிந்து தலைவன் பரத்தையரிடம் சென்றது. அதனால் தலைவி வருந்தி நிற்பது, பரத்தையர் பொருட்டு தலைவனிடம் தலைவி ஊடல் கொள்வது போன்ற நிகழ்வுகளை முப்பத்தைந்து பாடல்களில் கலித்தொகை (மருதக்கலி) எடுத்தியம்புகின்றது.

**பரத்தையர்**

பரத்தையர் இற்பரத்தை, காதற்பரத்தை, சேரிப்பரத்தை, மாயப்பரத்தை எனப் பலவாறாகக் குறிப்பிடப்படுகின்றனர். “பரத்தை என்பதற்குப் பொதுமகள், வேற்றுப்பெண், அயன்மை” என்று செந்தமிழகராதியும் (ப.454). “விபச்சாரி, விலைமகள்” என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியும் (ப.682) பொருள் தருகின்றன.

“சங்க காலத்தில் காமக்கிழத்தி, காதற்பரத்தை, நயப்புப் பரத்தை, இற்பரத்தை, தலைநின்றொழுகப்பட்ட பரத்தை, பரத்தை என ஆறு நிலையினர் காணப்பட்டதாகச் சங்க இலக்கியம் கூறுகின்றது”. (இலா.குளோரியா சுந்தரமதி, சங்க இலக்கியம் மருதம், ப.64)

ஆடவர்கள் தம் மனைக்கிழத்தியை மறந்து, அகத்தில் வாழாது புறத்தே சென்று பரத்தையருடன் கூடியொழுகினர். இது புறத்தொழுக்கம் எனப்பட்டது. தலைவன் பரத்தையருடன் கொள்ளும் இவ்வொழுக்கத்திற்குப் பொருள் மட்டும் அடிப்படையாகாது, அன்பும் இன்பமும் அடிப்படையாய் விளங்கியது. இப்புறத்தொழுக்கம் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே பரவியிருந்தது. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய நால்வரும் உரியவர் பரத்தையர் என்பதை,

**பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே**
**நிலத்திரி பின்றஃ தென்மனார் புலவர்** (தொல்காப்பியம், பொருளதிகாரம்.220)

என்றும்

**மாயப்பரத்தை யுள்ளிய வழியும்** (தொல்காப்பியம், பொருளதிகாரம்,145:33)

**பரத்தையிற் பிரிந்த காலை யான** (தொல்காப்பியம், பொருளதிகாரம் ,185:3)

**பரத்தை வாயி னால்வர்க்கு முரித்தே** (தொல்காப்பியம், பொருளதிகாரம் ,220:1)

**தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்** (தொல்காப்பியம், பொருளதிகாரம்.231:1)

என்றும் தொல்காப்பியர் பரத்தையரைப் பல சூத்திரங்களில் கூறியிருப்பதால், பழங்காலத்தில் சமூகம் பரத்தையரை அங்கீகரித்ததை அறியமுடிகிறது. இளம்பூரணர் 'ஆடலும் பாடலும் பயின்று அழகும் இளமையும் காட்டி, இன்பமும் பொருளும், வெளவும்' பண்பினைப் பரத்தையர் இலக்கணமாக வரையறுப்பர். இதனால், பரத்தையர் அழகும் இளமையும் கொண்டவர்கள். ஆடல், பாடல்களால் தலைவனை மகிழ்விப்பவர்கள் என்பது தெரிகின்றது.

வள்ளுவர் திருக்குறளில் 'வரைவின் மகளிர்' என அதிகாரம் வகுத்துப் பரத்தையரை கூறியிருப்பதும் இதை வலியுறுத்துகின்றது. அகப்பொருள் விளக்கம் தலைவன், தலைவியின் கற்பு வாழ்க்கையில் நிகழும் பிரிவுகளுள் ஒன்றாகப் பரத்தையிற் பிரிவை எடுத்துக்காட்டுகின்றது. மேலும்

**குடிப்பிறந் தோரை வடுப்படுத் துரைத்தலும்**
**மனைவியைப் பழித்தலும் வாடா ஊடலுட்**
**டலைவற் கழறலும் மனைவிக் கமைந்தந**
**ஒழுக்கமும் காமக் கிழத்தியர்க் குரிய** (அகப்பொருள் விளக்கம்,105)

அக மாந்தர்களுள் காமக்கிழத்தி, பரத்தையரின் செயல்கள் குறிப்பிடத்தக்கது என்பதை உணர்த்தும் வகையில் அவர்களின் செயல்களுக்கு இலக்கணம் வகுத்துள்ளது.

“பரத்தையர் பல கலைகள் கற்று அக்காலத்தில் செல்வந்தர் மாளிகைகளில் இருந்துள்ளனர். பரத்தையர் வாழ்கின்ற பகுதிகளில் சாதிப் பிரிவு முறைகள் இருந்ததாக இலக்கியச் செய்திகள் சான்றளிக்கின்றன. குறிப்பாக உயர்குடியில் பிறப்பவளுக்கு உரிய உயர்ந்த குலத்தைச் சார்ந்தவர்களை, தாசி என்றும், கணிகை என்றும், தாழ்ந்த குலத்தைச்

சாந்தவளை வம்பரத்தை என்றும் சேரிப் பரத்தையை வேசி என்றும் குறிப்பிட்டுள்ளனர்". (மு.தேவராஜ், பரத்தையர் மாலை, ப.13)

தலைவனுடன் பரத்தை மேற்கொள்ளும் செயல்களால், அவள் உள்ளத்து உணர்வையும் தலைவி போல் பரத்தை உரிமை பெற்றிருந்ததையும் காட்டுகின்றது. இதனால் தலைவி உள்ளத்தில் தோன்றும் புலவிக்குக் காரணமாகப் பரத்தையர் விளங்கியதோடு, தலைவியைப் போல் பரத்தையரும் தலைவன்பால் ஊடல் கொண்டனர். இது மருதத்திணைக்குரிய ஊடல் ஒழுக்கத்தைச் சிறப்பிப்பதாய் அமைந்திருக்கின்றது.

சங்க அக இலக்கியங்களில் கலித்தொகை பரத்தையர் ஒழுக்கத்தை முழுமையாகவும் செம்மையாகவும் எடுத்துரைக்கிறது. "பரத்தமையைத் தொழிலாகக் கொண்ட ஒரு தனிக்கூட்டத்தார்.அவர்கள் இருவகையினர். அத்தொழிலால் வாழ்க்கை நடத்திய பரத்தையர் எந்த ஒரு தனிப்புரவலனுடனும் தனியன்பு கொண்டவரல்லர். அவர்களைச் சேரிப்பரத்தையர் அல்லது காமக்கணிகையர் என்றனர். வேறுசிலர் அக்குலத்தைச் சேர்ந்தவர்களாயினும் ஒரு தனிப் புரவலர் மீது அன்பு கொண்டு அவரொடு காதல் வாழ்க்கை நடத்தினர்; ஆயினும் அவர்கள் ஒருவரையும் மணப்பதில்லை. அவர்களைக் காதற் பரத்தையர் அல்லது காமக் கிழத்தியர் என்பர். அவர்கள் மணமாகாத வாழ்க்கைத் துணைவியர்." (ந.சுப்ரமண்யன், சங்ககால வாழ்வியல், ப.397) இத்தகு இருவகையினரையும் மருதக்கலிப் பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. இவர்களை மருத மக்கள் ஞாயர், தாயர், தொடகத்துத் தாய், வழி முறைத்தாய் என்றழைத்தனர்.

**வதுவை அயர்தல்**

வதுவை என்ற சொல்லிற்கு 'மணம்' என்பதே பொருள். பண்டைய மக்கள் எந்த வரன்முறையுமின்றி மனம்போல் வாழ்ந்து வந்தனர். பின்னர் அவர்கள் நியதிகளுக்கு உட்பட்டு பண்பாட்டுடன் வாழவேண்டும் என்பதற்காகச் சமுதாயத்தில் திருமண ஒழுங்குமுறை உருவாயிற்று. இதை,

**பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப** (தொல்காப்பியம், பொருளதிகாரம், 143)

என்று தொல்காப்பியம் எடுத்துரைக்கின்றது. தலைவன் பரத்தையரை அறநூல் வழிப்பட்டுத் திருமணம் புரிந்தான். அந்த மணம் ஊரெல்லாம் ஆரவாரம் எழுமாறு இல்லத்தில் நல்ல நாள் பார்த்து, மணமுரசு முழங்க நிகழ்ந்ததை,

**பொதுக் கொண்ட கவ்வையின் பூ அணிப் பொலிந்த**
**நின் வதுவை அக்கமழ் நாற்றம்...** (கலித்தொகை 66:11-142)
**துணை மலர்க் கோதையார் வைகலும் பாராட்ட**
**மணமனைத் ததும்பும் நின்மண முழவந்து எடுப்புமே** (கலித்தொகை 70:9-10)

என்று வரும் பாடலடிகள் வலியுறுத்துகின்றன. இதனால் தலைவனிடம் அன்புறவு கொண்டவளாகப் பரத்தை வாழ்ந்தாள். தலைவன் தலைவியிடம் தன்மீதுள்ள உரிமையையும், அவன் பரத்தையர் மீதுள்ள உரிமையையும் வெளிப்படுத்தும் கூற்றுகளை,

**தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தையும்**
(தொல்காப்பியம், பொருளதிகாரம், 111)

என்று தொல்காப்பியமும்

**ஒருவர் தனக்கே உரிமை பூண்டு**
**வருகுலப் பரத்தையர்மகளி ராகிக்** (அகப்பொருள் விளக்கம்,113)

என்று அகப்பொருள் விளக்கமும் கூறுவதால் திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்க்கை வாழும் தலைவிக்கு அடுத்த நிலையில் மனையாளாகப் பரத்தையார் இருந்ததையும் பரத்தையர் பண்புகளையும் அறிய முடிகிறது.

**பரத்தையர் எழில்**

பரத்தையர் அழகிய மையுண்ட கண்களை உடையவராய், அழகுடையவராய் காணப்பட்டனர். மதிப்புமிகு உடை, ஆபரணங்கள் அணிந்திருந்தனர். கூந்தல் முதல் பாதம் வரை ஆபரணங்கள் சூடினார்கள். தெளிந்த மணிகளையுடைய ஆரவரிக்கும் சிலம்பு, கூந்தலுக்கும் காலுக்கும் நீலக்குதும்பை, கழுத்துக்கு முத்தாரம், விரல்களுக்கு மோதிரம், கைகளுக்கு சூடகம், சங்குவளை, தோளுக்கு முத்துவளையம், இடுப்புக்கு முத்துக்கோவை போன்ற அணிகலன்களை அணிந்திருந்தனர் என்று பரத்தையர் எழிலைப் பலவாறு தலைவியின் சொல்லாடல் வழி கலித்தொகைக் கூறுகின்றது.

**நலத்தகை எழில் உண்கண் நல்லார் . . . . . . . . .**
**கோடு எழில் அல்குற் கொடி அன்னார் முலை . . .** (கலித்தொகை 67:6,10)

**கிண்கிணி மணித்தாரோடு ஒலித்து ஆர்ப்ப ஒண் தொடிப்**
**பேர் அமர்க் கண்ணார் . . . . . . . . . . . . . . .** (கலித்தொகை 74:13-14)

ஒழுங்கு வரிசையில் அமைந்த பற்களையுடையவர். அவர்களின் கூந்தலில் நறுமணச் சாந்தும், புழுகும் மணக்கும். மான்பிணைப் போன்ற நோக்கத்தை உடையர். அகன்ற அல்குலும், கொடி போன்ற இடையும் உடைய பரத்தையரை,

**சோலை மலர் வேய்ந்த மான் பிணை அன்னார் பலர் நீ**
**கடவுண்மை கொண்டு ஒழுகுவார்**
**அவருள் எக்கடவுள் மற்று அக்கடவுளை செப்பீமன்** (கலித்தொகை 93:8-10)

என்றும்

**. . . . . . . . . . . . . . .கண்டார்க்கு**
**இறு முறை செய்யும் உருவொடு . . .**
**. . . . . . . . . . . . . . . . . . . . . . . .**
**நோக்கின் பிணி கொள்ளும் கண்ணொடு மேல் நாள் நீ**
**பூ பலி விட்ட கடவுளை கண்டாயோ** (கலித்தொகை 93:18-19,23-24)

கண்டவர்களுக்கு இறந்துபோகும் நிலையைச் செய்யும் அழகிய உருவத்தோடு, நோக்கினால் பிறரைத் தன்னுடன் பிணித்துக் கொள்ளும் கண் உடையவர் என்றும் கடவுளாகத் தலைவிப் புனைந்துரைக்கின்றாள்.

**புனலாட்டு**

பரத்தையர் மேற்கொள்ளும் இன்ப வாழ்வில் முதன்மையாக விளங்குவது புலனாட்டு. இதனை ‘நீர் விளையாட்டு’ என்றும் கூறுவர். தொல்காப்பியம்,

**கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு** (தொல். சொல்.319)

என்று குறிப்பிடுகிறது. இதில், 'கெடவரல்' என்பது துன்பம் கெடவரும் விளையாட்டு என்றும் இவையிரண்டும் புனல் விளையாட்டை உணர்த்தும் பண்டைய சொற்கள் என்றும் கூறுவர். பரத்தையர் ஆடும் இந்தப் புனலாட்டை அகப்பொருள் விளக்கம்,

**விருந்தியர் பரத்தையைப் பெருந்தேர் மிசைக்கொண்ட**
**டிளமரக் காவின் விளையா டற்கும்**
**புனலா டற்கும் புறநகர்ப் போகும்** (அகப்பொருள் விளக்கம்,66)

என்று கூறுகின்றது. பரத்தையருடன் தலைவன் புனலாடினான். பரத்தை தலைவன் செய்த குறியிடத்தே சென்று, அங்கு ஆடியும் பாடியும் புனலாடியும் தலைவனை மகிழ்வித்தாள் என்பதை,

**கனலும் நோய்த் தலையும் நீ கனங்குழையவரொடு**
**புனல் உளாய் . . . . . . . . . . . . . . . . .** (கலித்தொகை 66:13-14)

பொன்னால் செய்யப்பட்ட மகரக் குழை அணிந்த பரத்தையருடன் தலைவன் புனலாடினான் என்றும்

**இணர்தகை தண்காவின் இயன்ற நின்குறிவந்தாள்**
**புணர்வினில் புகன்று ஆங்கே புனல்ஆடப் பண்ணியாய்**(கலித்தொகை 69:16-17)

தலைவனை மகிழ்விக்கும் பொருட்டு பரத்தையர் புனலாட்டை மேற்கொண்டனர் என்றும் மருதக்கலிப் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. ஐங்குறுநூறு,

**. . . . . . .. . . . . . . . .மகிழ்நன்**
**மருதுஉயர்ந்து ஓங்கிய விரிபூம் பெருந்துறைப்**
**பெண்டிரொடு ஆடும் என்ப** (ஐங்குறுநூறு 33 : 1-3)

என்ற பாடலில் தலைவன் பரத்தையரோடு புதுப்புனல் ஆடுவது குறிக்கப்படுகிறது.

**துணங்கை ஆடுதல்**

துணங்கை என்பது 'பழுப்புடையிருகை முடக்கியடிக்கத் துடக்கிய நடையது' என்றும் 'சிங்கிக் கூத்தென்றும் இஃதழைக்கப்படும்' என்றும் நச்சினார்க்கினியர் கூறுகின்றார். இதனை, மகளிர் மகிழ்ச்சியில் கைகொட்டிக் கொண்டு நுடங்கி ஆடுங்கூத்து என்றும் தற்காலக் கும்மி போன்றது என்றும் கூறுவர். பரத்தையர் தலைவனோடு தான் கொண்ட மணத்தின் மகிழ்வினைக் கொண்டாடும் முகமாகத் துணங்கை ஆடினர்.இதை,

**தணந்ததன் தலையும் நீ தளரியலவரொடு**
**துணங்கையாய் எனவந்த கவ்வை** (கலித்தொகை,66:17-18)
**நினக்கு ஒத்த நல்லாரை நெடுநகர்த் தந்து நின்**
**தமர் பாடும் துணங்கையுள் அரவம் வந்து எடுப்புமே** (கலித்தொகை,70:13-14)

என்று வரும் மருதக்கலிப் பாடலடிகள் எடுத்துணர்த்துகின்றன.

**காதற்பரத்தையரின் ஊடல்**

ஊடல் என்பது தலைவன், தலைவிக்கு இடையே ஏற்படும் புலவி. அன்பினால் விளையும் சிறுபிணக்கு. ஊடலுக்குப்பின் இருவருக்கும் அன்பு மிகுதிப்படும் எனலாம். ஊடலின் தன்மையைத் திருக்குறள்,

**புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு**
**நீரியைந் தன்னார் அகத்து**. (திருக்குறள் 1323)

நிலத்தோடு நீர் பொருந்தினாற் போல நம்மோடு கலந்த அன்பு உடையவரான காதலருடன் ஊடுவதைக் காட்டிலும், தேவருலகத்து இன்பமும் சிறந்ததாகாது என்று கூறுவதில் ஊடல் இன்பத்தை அறியலாம். பரத்தையரும் தலைவனுடன் ஊடல் கொண்டதை,

**செறிவுற்றேம் எம்மை நீ செறிய அறிவுற்று**
**அழிந்து உகு நெஞ்சத்தேம் அல்லல் உழப்ப**
**கழிந்தவை உள்ளாது கண்ட இடத்தே**
**அழிந்து நிற்பேணிக் கொளலின் இழிந்ததோ**
**இந்நோய் உழத்தல் எமக்கு** (கலித்தொகை, 72:22-26)

உன்னுடன் உறவுகொண்டிருந்தேன். எம்முடன் நீயும் உறவுகொள்ள இப்போது உன் குறைகளை அறிந்து அழிந்த மனம் உடையவராய் அல்லலில் கிடந்து வருந்துகின்றேன். நடந்த குற்றங்களை எண்ணிப்பார்க்காமல் உன்னைக் கண்டவுடன் மனம் மாறி உன்னை ஆதரித்து ஏற்றுக்கொள்வதைக் காட்டிலும் இந்தப் பிரிவு நோயினால் வருந்திக்கிடத்தல் எமக்கு இழிந்ததன்று என காதற்பரத்தைத் தலைவனுடன் ஊடல் கொள்கின்றாள்.

மருதத்திற்கு உரிப்பொருள் ஊடலும் ஊடல் நிமித்தமும் ஆகும். இந்த ஊடல் தலைவிக்குரியதாக இலக்கண, இலக்கியங்கள் சுட்டுகின்றன. ஊடலுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தவராக மட்டுமின்றி, தலைவியைப் போல் தலைவனுடன் ஊடல் கொள்பவளாகவும் பரத்தையரைக் கலித்தொகை எடுத்துக்காட்டுகின்றது. இதனை,

**அன்பு இலன் அறன் இலன் எனப்படான் என ஏத்தி**
**நின்புகழ் பலபாடும் பாணனும் ஏமுற்றான்** (கலித்தொகை 74:6-7)

பரத்தையின் இவ் ஊடல்,

**கையும் காலும் தூக்கத் தூக்கும்**
**ஆடிப் பாவை போல** (குறுந்தொகை8 : 4-5)

என்று குறுந்தொகை குறிப்பிடும் தலைவியின் ஊடலை நினைவூட்டுகின்றன.

**ஊடியார் நலம் தேம்ப ஓடியெறிந்து அவர்வயின்**
**மால்தீர்க்கும் அவன்மார்பு என்று எழுந்த சொல் நோவேமோ**
(கலித்தொகை 68:24-25)

அமைதியும், அறிவும் வாய்ந்த பரத்தையரின் திறமான இந்த ஊடல் பேச்சில் 'தன் துன்பத்திற்குக் காரணமான தலைவனுடைய தகுதிப்பாட்டிற்கு ஊறு நேரலாகாது' என்னும் காதற்பரத்தையரின் உயர்ந்த காதலுள்ளம் வெளிப்படுகிறது.

இதனால் காதற்பரத்தை தலைவி போன்று தனி ஒரு தலைவனுக்கே உரிமை பூண்டவளாய் விளங்குகிறாள். தலைவன் மாட்டுப் பரத்தையர் கொள்ளும் ஊடல், தலைவனின் அன்பின்மையைக் கண்ட போதும், காதற்பரத்தையரின் அன்பை வெளிப்படுத்துவதாக மருதக்கலிப் பாடலடிகளால் உணரமுடிகிறது.

**தாயுள்ளம்**

பெண்களுக்குரிய பண்புகளுள் முதன்மையானது தாய்மை. குழந்தைகள் மீது அன்பு செலுத்துவது அனைத்து பெண்களுக்கும் உரிய குணம். இதில் பரத்தையர் விதிவிலக்கானவர் அல்லர். தலைவன், தலைவி கற்பு வாழ்க்கையில் மக்கட்பேறு குறிப்பிடத்தக்கது. தலைவனின் புதல்வன்மேல் தணியாத அன்பு கொண்டவளாகப் பரத்தையரைக் கலித்தொகை எடுத்துக்காட்டுகின்றது. தாயுள்ளம் கொண்ட பரத்தை, தலைவனின் மகனுக்குக் காளை முத்திரையைக் கைக்காணிக்கையாக இடுகிறாள். இதனை,

**......................அவளும்**
**மருப்புப்பூண் கையுறை யாக அணிந்து** (கலித்தொகை, 82 : 11-12)

என்றும்

**திருந்து அடி நூபுரம் ஆர்ப்ப இயலி விருப்பினால்**
**கண்ணும் நுதலும் கவுளும் கவவியார்க்கு**
**ஒண்மை எதிரிய அம் கையும் தண் எனச்**
**செய்வன சிறப்பின் சிறப்புச் செய்து இவ் இரா**
**எம்மொடு சேர்ந்து சென்றீவாயால் செம்மால்** (கலித்தொகை 83:16-20)

உனது திருத்தமான காலடிகளில் சிலம்புகள் ஆரவாரிக்க ஓடிவந்து, ஆசையோடு உன்னுடைய கண்ணாலும் நுதலாலும் கதுப்பாலும் உன்னைத் தழுவும் உன் தாயர்க்குப் பொலிவினைத் தோற்றுவிக்கும் அழகிய கைகளினாலும் உன் தந்தைக்கு நீ மனங்குளிர செய்யும் சிறப்புக்கள் போல எமக்கும் சிறப்புக்கள் செய்து, இந்த இரவுப்பொழுதுமட்டும் எம்மோடு தங்கியிருந்து செல்லவேண்டும் என்றும் தலைவனின் புதல்வன் மீது பேரன்பு கொண்டவாளாய் பரத்தைக் காட்சியளிக்கின்றாள்.

பரத்தையின் இவ்வுணர்வும் செயலும் தூய அன்பின் உயர்வை எடுத்தியம்புகின்றன. பரத்தையர், தலைவனது புதல்வனின் வடிவுக்கேற்ற அணியை அணிவித்து அவனை அழகுபடுத்துவதில் இன்பம் கண்டனர். பரத்தையின் இப்பாச உணர்வை அங்கீகரிக்கும் முகமாகப் பரத்தையரை ‘வேற்றுத்தாய்’ எனவும், 'தொடக்கத்துத் தாய்' எனவும் குறிப்பிடக் காணலாம். இதனால் தலைவனின் புதல்வன்பால் பரத்தை செலுத்தும் அன்பினில் தாயன்பினை உணர முடிகிறது.

“இத்தகையாரோடு உறவுகொண்ட ஆடவர்களைச் சமூகம் அன்று பழித்ததாகத் தெரியவில்லை. அவ்வாறு நடந்துகொள்ளுதல் மனிதனுடைய உரிமைக்கு முழுவதும் உட்பட்ட செயலே என்று கருதினர். ஆயினும் அக இலக்கியத்தில் மருதத்திணையில் இந்நிலை (பரத்தையோடு தலைவன் உறவுகோடலால் தலைவி ஊடுதல்) பேசப்படும் வகையைக் காணில், மணவாழ்க்கையின் அமைதி, இக்கணிகையர் தலைவனது அன்பைக் கவர்ந்து விட்டமையால், பலகாலும் சீர்கெட்டது என்பது போதரும்.” (ந.சுப்ரமண்யன், சங்ககால வாழ்வியல், ப.397) பரத்தையரின் இத்தகைய பண்புகளால்தான் பரத்தமை ஒழுக்கம் பழங்காலத்தில் கண்டிக்கப்படவில்லை என்பதும் அக மாந்தர்களுள் பரத்தையரும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளனர் என்பதும் அறியமுடிகிறது.

**தொகுப்புரை**

- பரத்தமை ஒழுக்கத்தைப் பண்டைய சமுதாயம் ஏற்றுக்கொண்டது. பரத்தையர் சேரிகள் என்னும் தனிப்பாக்கங்களில் வசித்தனர்.

- ❖ பரத்தையர் தலைவனுடன் கொள்ளும் உறவுக்குப் பொருள் மட்டும் அடிப்படையாகாது. அன்பும் இன்பமும் அடிப்படையாய் நிற்றலைக் காணலாம்.
- ❖ தலைவன் 'தண்டாப்பரத்தனாக', தலைவியிடம், பரத்தையிடம் தலைவன் எக்காலமும் மகிழ்ந்திருப்பதால் 'மகிழ்நனாக' காட்சியளிக்கின்றான் என்பதைக் கலித்தொகை பாடலடிகள் உணர்ந்துகின்றன.
- ❖ உலகில் உயிர்களின் தோற்றத்திற்குக் காரணமாக இருப்பது அகவொழுக்கம். எல்லாப் பொருட்களையும் விட அகப்பொருளே சிறப்புடையதாக அமைகின்றது.
- ❖ தலைவி தன்னிலை உரைத்தல் இல்லை என இலக்கண நூல்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் பரத்தையர் சுதந்திரமாகச் செயல்படும் தன்மை உடையவர்களாய்த் திகழ்கின்றனர்.
- ❖ பழந்தமிழ் இலக்கண, இலக்கியத்தில் போற்றப்பட்ட பரத்தையர், இன்றளவும் சமுதாயத்தில் தனிச்சமூகமாக வாழ்வதைக் காணமுடிகின்றது.

## துணைநின்ற நூல்கள்


1. இளம்பூரணர்(உ.ஆ.),(1973) தொல்காப்பியம் பொருளதிகாரம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி
2. குளோரியா சுந்தரமதி,இலா.,(1973) சங்க இலக்கியம் மருதம், கேரளாப் பல்கலைக்கழகம், கேரளா
3. சுப்ரமண்யன்,ந.,(2017)சங்ககால வாழ்வியல்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை
4. தட்சிணாமூர்த்தி,அ.,(2013) தமிழர் நாகரிமும் பண்பாடும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
5. திருஞானசம்பந்தம்,ச.,(உ.ஆ.)(2019) அகப்பொருள் விளக்கம், கதிர் பதிப்பகம், திருவையாறு.
6. தேவராஜ்,மு.(பதிப்பு),(2005) பரத்தையர் மாலை, தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்,சென்னை.


**References**


1. Ilampooran (Ed.), (1973) Tolkappiyam Bhattathikaram, Saiva Siddhanta Nulapadippukakkagam, Tirunelveli
2. Gloria Sundaramathi, E., (1973) Sangam Literature Marutham, University of Kerala, Kerala
3. Subramanian, N., (2017) Sangam Life, New Century Book House, Chennai
4. Dakshinamoorthy, A., (2013) Tamil Civilization and Culture, Manivasagar Publishing House, Chennai.
5. Thirugnanasambantham, S., (Ed.)(2019) Content Description, Kathir Publishing House, Thiruvaiyaru.
6. Devaraj, M. (ed.), (2005) Parathaiyar Malai, Department of Tamil Literature, University of Madras, Chennai.



**Copyright (c) Author**

**This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.**

**Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.**